ISSN:2582-9599



# நாட்டுப்புற இலக்கியங்களில் வழிபாட்டு மரபுகள்

**முனைவர் வெ.நிர்மலா**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**

**அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசுக் கலைக்கல்லூரி,**

**திருத்தணி-631209.**

**62**

**ஆய்வுச் சுருக்கம்:**

நாட்டுப்புற வழிபாட்டுத் தெய்வங்களை இரண்டு வகையாகப்பிரிக்கின்றனர். அவற்றுள் முதலாவது பெருந்தெய்வம் என்றும், இரண்டாவது சிறு தெய்வங்கள் அல்லது கிராமத் தெய்வங்கள் அல்லது நாட்டுப்புறத் தெய்வங்கள் என்ற சொற்களால் சுட்டப்படுகின்றது.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி வட்டத்தைத் சுற்றியுள்ள கிராமங்களில் ஆண் தெய்வங்களைவிட பெண் தெய்வங்களே மிகுதியானஇடங்களில் வழிபடப்படுகின்றன. ஆண் தெய்வங்களுள் முனீஸ்வரர் மிகுதியாக வழிபடுகின்ற நிலை காணப்படுகின்றது. பெண் தெய்வங்களுள் மிகுதியாக வணங்கப்படும் தெய்வங்களுள் திரௌபதியம்மன், மாரியம்மன் மற்றும் அங்காளம்மன் இரண்டும் பல்வேறு அடைமொழிப் பெயர்களில் வழங்கப்படுகின்றன.தெய்வ வழிபாட்டிற்கான விழாக்கள் விமரிசையாகக் கொண்டாடப்படுவதால் இவ்வாய்வில் திருத்தணி வட்டத்தில் திரோபதையம்மனை எவ்வாறு வழிபடுகின்றனர் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

**முன்னுரை:**

திருத்தணி வட்டார மக்கள் வைதீகமுறைகளுடன் பெருந்தெய்வநிலையில் வைத்து வணங்கப்பெறுகின்ற திரோபதையம்மன் வழிபாடு பற்றிய செய்திகளையும்,அம்மக்களின் வழிபாட்டுத் தெய்வமாக அமைவதற்கான காரணத்தையும் வெளிக்காட்டும் முகமாய் இவ்வாய்வு அமைகின்றது.

**திரோபதை:**

தமிழகத்தில் குறிப்பாக திருத்தணி வட்டத்தில் திரோபதையம்மன் வழிபாடு சிறப்பாக நடத்தப் பெறுகின்றது. இது வன்னியர்களின் குலதெய்வமாகவும் ஊரின் பொதுத் தெய்வமாகவும் அமைந்துள்ளது. “வடநாட்டில் பாஞ்சாலத்தில் பிறந்து வளர்ந்த பாஞ்சாலியம்மனையே திரோபதையம்மன் என்று தமிழ்நாட்டார் போற்றுகின்றனர்.வடநாட்டில் இவ்வம்மனை - அக்கினியம்மன்' என்று போற்றுகின்றனர்”! என்பார் எல்.கணபதிராமன்.

திரோபதை அக்கினியில் பிறந்தவள் என்றும் முற்பிறவியில் நளாயினி என்ற பெயரோடு புகழுடன் வாழ்ந்தவள் என்றும் வில்லிபாரதம்,

“மூளார் அழல் உற்பவித்தாள் இவள் முன்பவத்தில்
நளாயினி என்று உரைசால் பெருநாமம் மிக்காள்”

என்று உரைக்கின்றது.

திரோபதை அக்கினியில் பிறந்தவள் என்பதானாலேயே வன்னியர்களுக்குரிய தெய்வமாக வணங்கப்படுகின்றாள். வன்னி என்பது 'தீ' எனும் பொருளைக் குறிக்கும் வடசொல்லாகும். திரோபதை வழிபாடு பற்றிய ஆய்வு செய்த "ஆல்ப் ஹிஸ்டாபில்' என்பவர்,

"அன்பான பாஞ்சாலி அக்கியம் தன்னில்

அருமைப் பெண்ணாகப் பிறந்தவரும்நீ"3

எனவரும் பூசாரியின் பாடலைச் சுட்டிக்காட்டுவது மேற்கண்ட வில்லி பாரதப்பாடல் அடிகளோடு ஒப்பு நோக்கத்தக்கது.

"திரோபதை வழிபாட்டில் வன்னியர்கள் பெரும்பங்கெடுத்துக் கொள்வதும் இவர்களையடுத்து வேளாள முதலியார் இவ்வழிபாட்டில் மிகுதியாகக் கவனம் செலுத்துவதும் குறிக்கத்தக்கன. வன்னியரும் வேளாள முதலியாரும் எந்தப் பகுதியில் மிகுதியாக இருக்கின்றனரோ அந்த அந்தப் பகுதிக்கேற்ப இவ்வழிபாடுகளும் சிறப்பாக நடத்தப்படுகின்றன"* என்பதைச் சுட்டுகின்றார், ஆல்ப் ஹிஸ்டாபில்.

திரோபதையானவள் வன்னியர்களுடைய மூதாதை எனும் வழக்கும் இங்குக் குறிப்பிடத்தக்கது. பெருந்தெய்வ மரபில் வைத்துப் போற்றப்படும் சிவனோடும் தீயோடும் தொடர்புபடுத்திக் கூறும் வன்னியர்களின் புராண வரலாறு "மேல்நிலையாக்க' அடிப்படையில் அமைந்ததாகக் கொள்ளவியலும். மேல்நிலையாக்கக் கருத்தின்வழி மகாபாரதக் கதையில் வரும் திரோபதையம்மன் வன்னியர்களின் குலதெய்வமாகக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இதற்குக் காரணமாகத் "தீயில் பிறந்தவள் திரோபதை' என்பதைச் சான்றுகாட்டி வன்னிய இனத்தாரும் சம்பு முனிவரின் யாகத்தீயில் பிறந்தவர்கள் என்கின்ற காரணத்திற்காகத் தாங்கள் அக்கினி மரபினர் எனக்கூறித் திரோபதையம்மனைத் தனித்த ஒரு சாதிக்குரிய தெய்வமாக மாற்றிக்கொண்டனர் எனக் கருத முடிகின்றது.

இவையன்றிப் பாண்டவர்களைப் போலவே வன்னியர்களும் தங்களைச் சந்திர குலத்தவ் என்று கூறிக்கொள்கின்றனர். 'வன்னிமரம்' பாரதக் கதையில் பாண்டவர்களின் ஆயுதங்களை ஓராண்டு காலம் மறைத்து வைக்கப் பயன்பட்டது என்கின்ற கருத்தும் இங்குக் கருதத்தக்கது.

திரோபதையம்மனுக்குக் காவல் தெய்வமாகப் 'போதராசர்' எனும் தெய்வம் அமைகின்றது. இத்தெய்வம் "இப்போதும் தொண்டை நாட்டில் உண்டு. இக்கோயில்களை அரச பரம்பரையாக உரிமை பாராட்டும் வன்னிய குலத்தார் போற்றி வருவதை அறியமுடிகிறது" எனும் கருத்தும், பல்லவர்கள் வன்னியர்கள் சாதிய நோக்கில் ஒன்றானவர் எனுங்கருத்தும்," திரோபதை' காவல் தெய்வமான 'போத்தராசா' வன்னியர்களுக்குரியதாகவே அமைவதும், சாதிய நோக்கில் திரோபதை வன்னியருக்குரியது என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் எனக் கருதமுடிகிறது.

**அம்புகுத்தல் விழா**

திரோபதையம்மன் வழிபாடு பதினெட்டு நாட்கள் நடைபெறுகின்றது. இப்பதினெட்டு நாளும் பாரதம் படிக்கப்படுகின்றது. ஊரில் உள்ள மக்களின் பொருளாதார வசதிக்கேற்பத் தெருக்கூத்துக்கள் வழிப் பாரதக்கதை தினமும் ஆடிக் காண்பிக்கப்படுகின்றது.

பாண்டவர்கள் தங்களுடைய விரதகாலத்தில் வன்னிமரத்தில் ஆயுதங்களை மறைத்து வைத்த நிகழ்ச்சி திரோபதையம்மன் வழிபாட்டோடு தொடர்புபடுத்தி நிகழ்த்தப்பட்டு வருகின்றது. போகிப் பண்டிகையன்று ஊரின் நடுவே நடப்பட்டுள்ள வாழைமரத்தைக் கருவியாகக் கொண்டு இந்த நிகழ்ச்சி நடத்தப்பெறும்.

வாழைமரம் வன்னிமரமாகக் கொள்ளப்படுகின்றது.இம்மரத்திற்கு மஞ்சள், குங்குமம், பூ முதலியவற்றால் அலங்காரம் செய்யப்படுகின்றது. அன்று மாலையில் திரோபதையம்மன்கோயிலில் இருந்து அம்மன், அர்ச்சுனன் உருவுகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். மரத்தின் அருகே அர்ச்சுனின் கையில் உள்ள அம்பு அவ்வாழை மரத்தின் மீது படுமாறு மூன்று முறை எய்யப்படுகின்றது. இந்நிகழ்ச்சி முடிந்ததும் வாழைமரம் வெட்டப்பட்டு ஊாமக்களால் புனிதப்பொருளாக எடுத்துச்செல்லப்படுகின்றது.

**திரோபதையம்மன் வழிபாட்டில் தீமிதித்தல்**

பாண்டவப் போரின் முடிவுக்கான விழாவாகத் தீமிதி விழா அமைகின்றது. தீமிதி விழாவே திரோபதையம்மன் வழிபாட்டிற்குரிய சிறப்புமிக்க விழாவாக அமைகின்றது. தீயோடு தொடர்புடைய வன்னியர்கள்,'அக்கினி'க்கரகம் சுமந்துவந்து தீ மிதிப்பது இவ்விழாவிற்கான சிறப்பாகும்.

**தீமிதிப்பதற்கான கதை**

18 நாள் போர் முடிந்ததும் தாமன் கிருட்டிணரைப் பார்த்துக் “கிருட்டிணா போரில் கணவனை இழந்து கதறிப் புலம்புகின்ற மக்களிடையே நான் ஏன் ஆட்சி செய்ய வேண்டும்” என்று கேட்டபோது, கிருட்டிணன் திரோபதையை அடைத்துத் தீயில் பிறந்ததை நினைவுபடுத்தி அதன்மூலம் “நீ தீயில் புகுந்து மீண்டுவா, நீ அப்படிச் செய்வதால் அழுதுபுலம்புகின்ற அத்தனைபேரும் அவ்வாறு செய்யட்டும் , நம்பிகைை உள்ளவர்கள் தீயில் புகுந்து திரும்பிவந்தால் அவர்களுக்கு ஆட்சியைத் திருப்பித் தருவோம் ” என்று கூறினான். திரோபதைத் தீயில் இறங்கி மீண்டும் திரும்பினாள். மற்றவர்கள் தீயிலேயே இறந்துபோயினர். அதன்பிறகு பட்டாபிஷேகம் முடிக்கப்பட்டது. இதன் காரணமாகவே மக்கள் இன்றும் தீமிதிக்கின்றன்ஏ என்கின்ற கதை வழங்கப்படுகின்றது.

திரோபதையம்மன் கோயிலில், தீ மிதிப்போர தங்களைத் தீயில் பிறந்த திரோபதையின் மரபினர் எனக்காட்டிக் கொள்ளவும் திரோபதை தீயில் இறங்கியதை நினைவுபடுத்தவுமே இவ்விழாவைச் செய்கின்றனர். கதையில், தீமிதிப்பதற்கான காரணம் கூறப்பட்டிருந்தாலும் சமூகரீதியில் தீயும், தீயோடு தொடர்புடைய சடங்குகளும் பின்வரும் நிலைப்பாட்டினை எடுத்துக் காட்டுவன எனக்கொள்வதே பொருத்தமானது.

சாதிய அமைப்பில் பெருந்தெய்வ வழிபாடுகள் ஒரு கட்டத்தில் சூத்திர இனத்து மக்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. நந்தனார் தீயிலிறங்கிப் புனிதம் பெற்ற பின்பு சிவனை வழிபட்டதை நந்தனார் சரித்திரம் எடுத்தியம்புகிறது. இங்குச் சிவனை வழிபடத் “தீ. தூய்மை அல்லது புனிதம் என்கின்ற நிலையில் பயன்படுகின்றது. இதைப் போலவே சூத்திர இனத்தைச் சேர்ந்த வன்னியர்கள் தங்களைச் சமூக அளவில் உயாத்திக்கொள்ள அதாவது சத்திரிய நிலைக்கு உயரும்போது மேற்கண்ட தீ மிதித்தல் வழக்கை மேற்கொண்டனர் எனக் கருதவேண்டி உள்ளது.

எனவே, திரோபதை வழிபாடு வன்னிய இனத்திற்கு உரித்தான தன் காரணம் திரோபதை தீயில் தோன்றியவள் என்பதே வன்னி மரமும் வன்னியர் என்ற ஓர் இனத்தின் பெயரும் ஒன்றாக அமைவதால் வன்னிமரத்தில் பாண்டவர் தங்களது படைக்கலங்களை மறைத்துவைத்த நிகழ்ச்சி, அம்புகுத்தல் வழிபாடாக நினைவு கூறப்படுகின்றது. தீமிதித்தல் மேல்நிலையாக்கத் தன்மையைப் புலப்படுத்துகிறது.

**திரோபதையம்மன் வழிபாட்டில் வன்னிய இனத்தாரின் பிற பங்குகள்**

திருத்தணியை சுற்றியுள்ள பெரும்பான்மையான ஊர்களிலும் திரோபதையம்மன் வழிபாடு மிகவும் சிறப்பாகச் செய்யப்படுகின்றது. கோயில் அமைந்துள்ள இடத்திற்குச் சுற்றுப்புற ஊர்களில் உள்ள வன்னியர் சாதியைச் சேர்ந்த மக்கள் பெரும்பாலோர் வந்து கலந்துகொள்கின்றனர். குறிப்பாக வன்னிய மக்களில் சிவநெறியைப் பின்பற்றுவோர் இப்பகுதியில் தீமிதிப்பது குறிப்பிடத்தக்க ஒன்று. வைணவ நெறியைப் பின்பற்றுவோரும் கோயிலில் தீமிதிக்கின்றனர். இவர்கள் திரோபதையம்மனை வழிபாட்டுக் கடவுளாக மட்டுமே கொள்கின்றனர்.

தீமிதிப்பது கிடையாது. வன்னியர் பிரிவில் அடங்கும் ஒருபிரிவு மக்கள் சைவ நெறியைப் பின்பற்றுவோர் வைணவ நெறியைப் பின்பற்றுவோரைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் எனக் கூறிக்கொள்வது இங்குச் சுட்டத்தக்கது. தொடக்கத்தில் வன்னியர்கள் அனைவருக்குமாய் இருந்த திரோபதையம்மன் வழிபாடு பின்னாளில் சைவ நெறியினாக்குரியதாய் மாற்றப்பெற்றிருக்க வேண்டும் அல்லது இவை வைணவ நெறியினாக்கு மறுக்கப்பட்ட தன் காரணத்தால் இம்மக்கள் இந்த வழிபாட்டில் தீ மிதிக்கின்ற வழக்கத்தை மேற்கொண்டு இருக்க வேண்டும்.

இன்றளவில் இக்கோயில் வழிபாட்டுத் தீமிதிப்பதில் அனைத்து மக்களும் கலந்துகொள்கின்றனர். பார்த்தொழுகுதல் அல்லது வேண்டுதல் நிமித்தமாக ஆனால், இவ்வழிபாடு இன்று அனைத்து மக்களுக்கும் உரியதாக விளங்குகின்றது.

**திருவிழா செய்முறை**

முதல்நாள் திருவிழாவில் சலம் திரட்டுதலும் (ஆற்றிலிருந்து நாகொணர்தல்) கொடியேற்றுதலும் நிகழ்த்தப்பெறுகின்றன. அதன்பின்னர் ஒவ்வொரு நாளும் மாலை பாரதம் படித்தல் நடைபெறுகின்றது. பாரதம் படித்தலும் அது தொடர்பான சடங்குகளும் தினமும் மாலைநேரங்களில் பதினெட்டு நாட்களுக்குச் செய்யப்படுகின்றன. அம்மன் வீதியுலா பாரதக்கதை கூறி முடிந்தவுடன் நிகழ்த்தப்பெறுகின்றது.

திருவிழாக் காலங்களில் முதல் பதினைந்து நாட்கள் பாரதக் கதை மட்டுமே படிக்கப்படுகின்றது. பதினாறாம் நாள் தொடங்கிப் பதினெட்டாம் நாள் முடியும் வரை திரோபதையம்மன் தொடர்பான திருவிழா சடங்காகக் கொண்டாடப்படுகின்றது.

**1. அரவான் களபலி**

**2. பக்கா சூரனுக்குச் சோறிடல்**

**3. படுகளம் போடுதல்**

**4. அர்ச்சுனன் தபசு எனும் அர்ச்சுனன் வில்வளைக்கும் நிகழ்ச்சி**

**5. திரோபதையம்மன் திருமணம்**

**6. சவுக்கடி தருதல்**

**7. தீமிதித்தல்**

எனும் வரிசையில் திருவிழா நிகழ்ச்சிகள் அமைகின்றன.

மேற்கண்ட சிறப்பு நிகழ்ச்சிகளில் அரவான் களபலி, பக்கா சூரனுக்குச் சோறிடல், படுகளம் போடுதல் போன்றவை பதினேழாம் நாள் நிகழ்ச்சியாகவும், அர்ச்சுனன் தபசு, திரோபதையம்மன் திருமணம், சவுக்கடி தருதல், தீமிதித்தல் போன்றவை பதினெட்டாம் நாள் நிகழ்ச்சியாகவும் அமைகின்றன.

**அரவான் களபலி**

பாரதப்போர் தொடங்கும் முன்பு அரவான் களபலி கொடுக்கப்பட்டதை நினைவு கூறும் முகமாக இச்சடங்கு அமைகின்றது.

**பக்கா சூரனுக்குச் சோறிடல்**

வீமன் சூரனை அழிக்கும் நிகழ்ச்சி ஊரின் பொது இடத்தில் நிகழ்த்தப் பெறுகின்றது. இந்நிகழ்ச்சியில் வீமனாக வன்னியர் பிரிவைச் சோந்த குறிப்பிட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர் வேடமிட்டு ஒரு வண்டியில் ஊர்வலமாக வருவார். வேறொரு வண்டியில் அதே பிரிவில் அடங்கிய வேறொரு குடும்பத்தைச் சேர்ந்த நபர் சூரனாக வேடமிட்டு வருவார். இந்த ஊர்வலத்தின்போது ஊரில் உள்ள பொதுமக்கள் தீப ஆராதனை செய்து தங்கள் வீட்டில் சமைக்கப்பட்ட உணவை (கறி சோறு, கருவாடு, மீன், முருங்கைக்கீரை போன்றவற்றால் ஆன உணவு) வண்டியில் இடுவர். ஊர்
முழுவதுமிருந்து உணவு சேகரிக்கப்பட்ட பின்பு அவ்வுணவு வண்டி பொது இடமான "மந்தைவெளி'க்குக் கொண்டு வரப்படும்.

படுகளம் இடப்படுகின்ற இடத்திற்கு வடக்குப்புறம் வீமன் உணவு வண்டியோடும் தெற்குப்புறம் சூரனும் நிறுத்தப்படுவர். அதன்பின்னர் சூரன்,"பசி, எனக்கு உணவிட வேண்டும்" எனக் கட்டளை இட்டு அதைப் பாடலாகப் பாடுவார். இவ்வேளையில் வீமன் வண்டியில் உள்ள உணவில் இருந்து ஒரு உருண்டை சோற்றை உருட்டி சூரனுக்குத் தருவார். அதன்பின்பு சூரன் மருள்வந்து மயங்கிவிழ வண்டியில் உள்ள சோற்றைப் பொதுமக்கள் அனைவந்து வந்து பெற்றக் கொள்கின்றனர்.

**படுகளம் இடுதல்**

இவ்வுணவிடும் நிகழ்ச்சி நடந்து முடிந்த பின்னர்ப் 'படுகளமிட' வேப்பிலைக் கொத்தினால் எல்லைக் கோடிட்டு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் ஏழு அல்லது ஒன்பது வன்னியர் பிரிவைச் சோந்த நபர்கள் மஞ்சள் துணியால் மூட்பபட்டு அப்பகுதியில் படுக்குமாறு செய்யப்படுகின்றனர். அவர்களைக் கோயில் பூசாரிளும் ஊர்ப் பிரமுகர்களும் மேலும் கீழுமாக உருட்டி எடுத்தவுடன் 'களபலிக்காக' நட்டுவைக்கப்பட்ட அரவான் சிலை உடைந்து நொறுக்கப்படுகின்றன படுகளம் போடுகின்ற இந்நிகழ்ச்சி பாரதப்போர் நடைபெறுவதை விளக்கும் சடங்காக நடத்தப்புடகின்றது.

**அர்ச்சுனன் தபசு**

திரோபதையம்மன் திருவிழாவில் பாரதப்போரின் கதைக்கு ஏற்ற வண்ணம் ஒவ்வொரு நாளும் கூத்து நடத்தப்படும். குறிப்பாக "அர்ச்சுனன் தபசு' இவ்வகையில் பக்தியோடும் சிறப்பாகவும் கூத்தாக

அமைகின்றது. இக்கூத்தினை ஆடுவோர் வன்னியர் பிரிவினைச் சோந்தோர் என்பதைப் பின்வரும் குறிப்பின்வழி அறியமுடிகின்றது.“அர்ச்சுனன் தபசுக் கூத்தில் தபசுத்தூண் ஏறத்தொடங்கும் அர்ச்சுனன் படிக்கொருப்பாடலாகப் பாடியபடியே உச்சிபோய்ச் சேர்தல் வேண்டும்.... இவ்வாறு ஒவ்வொருபடியிலும் இருந்துகொண்டு அர்ச்சுனன் வேடதாரி தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற திருப்பாடல்களைப் பாடுவது இன்றைக்கும் வழக்கில் இருந்துவரும் ஒரு கூறாகும்”

அர்ச்சுனன் வில்லை வளைத்துத் திரோபதையைத் திருமணம் செய்துகொண்ட நிகழ்ச்சியானது அர்ச்சுனன் தபசுச் சடங்காக நிகழ்த்தப்படுகின்றது. புதிதாக வெட்டிவரப்பட்ட பனைமரத்தில் பதினெட்டுப் படிகள் அமைக்கப்பட்டு அது தீமிதி நடக்கும் இடத்தின் அருகே நட்டுவைக்கப்படுகின்றது. முற்பகல் பன்னிரண்டு மணிக்கு வன்னியர் பிரிவைச் சேரந்த கோயில் பூசாரி அர்ச்சுனன் மரச்சிலையைத் தலையில் ஏந்திய வண்ணம் அப்பனைமரத்தில் அமைக்கப்பட்டுள்ள படிகளில் ஒவ்வொன்றாய் ஏறுவார். அப்போது பக்திப்பாடல்களைப் பாடிய வண்ணம் அவர் படியில் ஏறுவார். பிறகு மூங்கிலாலான மெல்லிய தடியை வளைத்து அதை மஞ்சள் துணியால் கட்டி வில்லினைப் போலாக்கி அப்பனைமரத்தில் இட்டு வருவார். இந்நிகழ்ச்சியே அர்ச்சுனன் தபசு எனப்படுகின்றது.

இந்நிகழ்ச்சி முடிந்தவுடன் இதனைத் தொடர்ந்து ஊரில் உள்ள சம்பந்தி முறையுள்ள இரண்டு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்களைப் பெண் வீட்டார், பிள்ளை வீட்டார் எனக் கூறிக்கொண்டு திரோபதைக்குச் சடங்குகள் செய்யச் சீர் கொண்டு வருகின்றனர். திரோபதைக்குப் புதிய ஆடைகள் செலுத்தப்படுகின்றன. இதன் பின்னர் திரோபதையம்மன் திருமணம் நடைபெறுகின்றது. திருமண நிகழ்ச்சி முடிவடைந்த உடன் அம்மன் அலங்கரிக்கப்பட்டு அதற்கான தேர் ஆயத்தமாக உள்ள இடத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது. அப்போது கோயில் பூசாரி தன் கையில் உள்ள சாட்டையால் ஒரு நபரை மார்பில் ஓங்கி அடிப்பார். அவர் வாயில் இருந்து இரத்தம் வருவது போன்ற சடங்கு நடத்தப்பெறும். பின்பு, அவரைத் தேரின் ஒரு புறத்தில் உள்ள தூணில் கட்டிவைக்கின்றனர். இச்சடங்குகள் முடிவடைந்ததும் திரோபதியம்மன் உரு

அலங்கரிக்கப்பட்டு தீமிதிக்கின்ற இடத்தை அடைகின்றது.

ஏற்கெனவே தீமூட்டப்பட்ட திடலில் பூசாரி அக்கினிக் கரகத்துடன் முதலில் நுழைந்து தீயினை மிதிப்பார். அதன்பின்னர் மற்ற மக்கள் தீமிதிக்கத் தொடங்குகின்றனர். தீமிதிக்க வருவோர் ஒவ்வொருவரும் 'சாட்டையடி' வாங்கிய பின்னரே தீமிதிக்க அனுமதிக்கப்படுவர். துரியோதனனையும் துச்சாதனனையும் அழித்துத் திரோபதை தன்னுடைய குறிக்கோள் நிறைவேற்றியதன் தன்மையை விளக்கும் சடங்காகச் “சாட்டையடி நடங்கு நடத்தப்படுகின்றது'. இவ்வாறு சடங்குகள் முடிந்தபின்னர் அம்மன் வீதியுலா நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

இவ்வாறு நடக்கும் சடங்குகளிலும், கூத்துகளிலும் பங்கேற்போர் பெரும்பான்மையினர் வன்னியராக இருப்பதும், வன்னியரில் பெரும்பான்மை சைவ சமயத்தைப் பின்பற்றுவோர் திரோபதை வழிபாட்டில் ஈடுபாடு கொள்வதும், தீமிதிப்பதும் தேவார திருவாசகங்களுக்கு முதலிடம் தருவதும் கருத்தில் கொள்ளத்தக்கவை.

மேலும், தீயோடு பிறந்தவள் திரோபதை என்பதால் தீயில் பிறந்தவர்களாகக் கூறிக்கொள்ளும் வன்னியர்களும் இத்தகு வழிபாட்டினைச் செய்து வருகின்றனர் என்பதைக் களஆய்வின்வழி அறியமுடிகின்றது.

**பெருந்தெய்வங்கள்**

கிராமப்புற மக்கள் தாம் மேற்கொண்ட முயற்சியில் வெற்றி கிடைத்தமைக்குத் தெய்வ சக்தியே காரணம் என நம்பினர். அத்தெய்வத்திற்கு நன்றிக் கடனைச் செலுத்த விரும்பினர். நன்றிக்கடனாக உயிர்ப்பலி கொடுத்து, அந்த இறைச்சியைப் பகுத்துண்டு மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். பெருந்தெய்வ வழிபாட்டில் உயிர்ப்பலி கிடையாது. இறைச்சி உணவை உண்ணும் நாளில் கோயிலுக்குச் செல்வது கிடையாது.

நாட்டுப்புற வழிபாட்டில் பெரும்பாலும் கோழி, ஆடு, பன்றி, எருமை ஆகியவை பலியிடப்படுகின்றன. பூசணி, எலுமிச்சை, தேங்காய் போன்றவை உடைக்கப்படுகின்றன. தெய்வங்களுக்கு பூ, மாலை, குங்குமம் ஆகியவற்றால் அலங்காரம் செய்யப்படுகிறது. நாட்டுப்புற வழிபாடு பெரும்பாலும் மக்களின் பொருளாதார வசதியைப் பொறுத்தே அமைகிறது. அம்மனுக்குப் புடவை சாற்றுதல், நகை செய்து கொடுத்தல், கண்கள் செய்து கொடுத்தல் (கண்ணடக்கம்) போன்ற நோத்திக் கடன்கள் நிறைவேற்றப்படுகிறது. பெருந்தெய்வ வழிபாட்டில் எலுமிச்சை, தேங்காய் போன்றவற்றை வழிபாடு செய்யப் பயன்படுத்துகின்றனர். பெருந்தெய்வங்களுக்குப் பூ, மாலை, திருநீறு போன்றவை சாற்றப்படுகின்றன.

**தொகுப்புரை**:

பெருந்தெய்வமான திரோபதையம்மன் வழிபாட்டு மரபுகளை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம். அவை

1) பூசைகள், விழாக்கள் முதலியவை குறிப்பிட்ட நேரம் மற்றும் நாள்களில் திட்டமிட்டு நடத்தப்படுவது.

2) சைவ உணவே படையல் பொருளாக இருப்பது.

3) வழிபாட்டிடங்கள் நாடு தழுவிய அளவில் விரிந்து பரந்திருப்பது.

4) எழுதப்பட்ட புராண மரபுகளைக் கொண்டிருப்பது.

இத்தகைய பண்புகளைக் கொண்டதாகப் திரோபதையம்மன் வழிபாடு அமைந்திருக்கிறது.

**முடிவுரை**:

கிராமத்தெய்வங்கள் என்பவை ஊரிலுள்ள அனைவரும் பங்கெடுத்துக் கொள்ளக் கூடியவையாக உள்ளன. இவை ஊரின் மையப் பகுதியிலும், பொது இடங்களிலும் அமைந்து காணப்படுகின்றன.வரலாற்று முறையில் நோக்கினால் நாட்டுப்புற வழிபாட்டு நிலைகளே காலப்போக்கில் பல்வேறு மாற்றங்களை அடைந்து பெருந்தெய்வ வழிபாட்டு நெறிகளைப் பெற்றுள்ளன.மக்களால் வழிபடப்படும் திரோபதையம்மன் கிராம மக்கள் மனதில் வைத்துப் போற்றும் தெய்வமாக இருந்துவருகிறது. கிராமத்தெய்வங்களில் துரோபதையம்மன் பெருந்தெய்வ நெறிப்பாடுகளையும், அமைப்புகளையும் பெற்று வழிபடும் தெய்வமாகக் காணப்படுகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. கணபதிராமன்.எல், திருநெல்வேலிப் பகுதியில் சிறுதெய்வ வழிபாடு - (பக்.48).

2.Hiltebeitel,Alf, The cult of Draupati Mythologies from Gingee to Kurukshetra,(p.)

3.Ibid, (p. 33).

4. தாமரைக்கண்ணன், சம்புவரையர், (பக்.8).

5. அ.அறிவுநம்பி, தமிழகத்தில் தெருக்கூத்து ப.28-29.